**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 31/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஷரயாஸ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. இளஞ்செழியன்** | **Calling** | : | |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **19** |
| | | | **Dated** | : | **30.07.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), **திரு. ஷரயாஸ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நான் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் M.A., படித்து வருகிறேன். அசா. 1 சுபாஷினி என் அம்மா ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். 2024ம் வருடம் மே மாதம் தேதி ஞாபகம் இல்லை, நான் மொட்டணம்பட்டி இரயில்வே கேட் அருகே எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் அக்னி லிங்கேஸ்வரர் கோவில் அருகே நான் வந்தபோது, ஆஜர் எதிரி, நீலகண்டன் என்பவரை தகாத வார்த்தைகளால் பேசி இரண்டு கத்திகளால் மாறி மாறி குத்தி, இன்று உன்னை கொல்லாமல் விடமாட்டேன், இல்லை என்றால் எதிரின் அம்மா எதிரியிடம் நீலகண்டனை கொல்லாமல் வீட்டிற்கு வரக்கூடாது என்று எதிரியிடம் சொல்லிக் கொண்டு இருந்தார். அதைப் பார்த்த நான் அவர்கள் இருவரையும் சத்தம்போட்டு, சண்டையை நிறுத்தும்படி

கூறினேன். அதில் நீலகண்டனுக்கு நெஞ்சு, மேல் வயிறு, பின் முதுகு, கை மற்றும் தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டது. அப்போது என் அம்மா சுபாஷினி தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு வந்தார். அதன் பின் நான், என் அம்மா சுபாஷினி அருகில் இருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தோம். நீலகண்டன் 1 வாரத்திற்கு மேல் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். ஆஜர் எதிரி தான் சம்பவதன்று நீலகண்டன் என்பவரை இரண்டு கத்திகளால் மாறி மாறி குத்தியவர் ஆவார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அசா. 1 மற்றும் அசா. 2 உறவினர்கள் என்றால் சரிதான். இந்த சம்பவம் சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. சம்பவத்திற்கு முன்பு எதிரிக்கும், நீலகண்டனுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் சம்பவத்தின்போது நான் எங்கு இருந்து எங்கு சென்று கொண்டு இருந்தேன் என்று சொல்லியுள்ளேன். சம்பவத்தின் போது நான் எந்த வாகனத்தில் வந்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அந்த வாகனத்தின் பதிவு எண் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் கத்திகளின் அளவு மற்றும் வடிவம் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து ஏதேனும் பொருட்களை எடுத்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. சம்பவம்

பற்றி அசா. 1 க்கு நான் தகவல் சொல்லவில்லை என்றால், அவர்கள் வந்த பின்னர் கூறினேன்.

நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நீலகண்டனுக்கு பல பெண்களால் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. நீலகண்டன் வாகனத்தில் செல்லும் போது நிலை தடுமாறி கீழே விழுந்ததால் தான் இந்த காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தின் போது யார் யார் இருந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அசா. 1ன் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது எதிரி அணிந்து இருந்த உடை மற்றும் அதன் நிறத்தை பற்றி போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது வெள்ளோடு செல்லும் பாதையில் யார் யார் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. நான் தகவல் சொல்லும் முன்பே அசா. 1 சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். அசா. 1க்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. கடந்த 2009ம் வருடத்தில் இருந்து நீலகண்டனுக்கும், எதிரிக்கும் என்ன பிரச்சனை என்றும், முன் விரோதம் இருந்தது என்றும் எனக்கு நேரடியாகத் தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பாக்காததால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சுபாஷினி மற்றும் நீலகண்டனின் துண்டுதலின் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R V RAJA KUMAR
Digitally signed by R V RAJA KUMAR
Date: 2025.07.30 18:16:42 +0530